IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,
TIRUVANNAMALAI.
MCOP. No. 598/2022

**10.10.2023 – மா.சா.1 திருமதி. சுதா** சத்திய வாக்குமூலத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது கணவரின் இறப்பு சான்றை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவரின் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை. 4, 5 மனுதாரர்கள் தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 4, 5, மனுதாரர்கள் எங்களுடன் ஒன்றாக வசிப்பதை காட்ட ஆதாரம் உள்ளது. மாலா , உஷா ஆகியோருக்கு திருமணமாகி அவர்களுடைய கணவர்களுடன் தனி தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான் . மாலா திருச்சியிலும், உஷா ராதாபுரம் கிராமத்தில் வசிக்கிறார்கள் . எனது கணவரின் வயதை நிரூபிக்க பிறப்பு சான்று , கல்வி சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் கரும்பு வெட்டும் மேஸ்திரி வேலை செய்து வந்தார் என்பதை காட்ட ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. எங்களுக்கு 60 செண்ட் சொத்து உள்ளது . 4 ஏக்கர் போகியம் பெற்று பயிர் செய்து வந்தோம் . பச்சைமுத்து, குண்டு (எ) ஏழுமலை, கேசவன் , முருகன் ஆகியோர்களிடம் போகியத்திற்கு வாங்கி பயிர் செய்து வந்தோம் . போக்கியம் எழுதி கொண்டதற்கான பாண்டு என்னிடம் உள்ளது . அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும்.

/ உண்மை நகல் /

ஒம்/– P. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.